**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10012025-9353

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 24.01.2025

Accepted: 15.03.2025

Published: 01.04.2025

Citation:
Jetheeswaran, Priyadarshny. 2025. "Lullaby Songs in the Rural Divine Worship of the People of Sri Lanka's Eastern Province - Tradition and Change." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 80–90.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i1.9353

*Corresponding Author:
priyavasan7@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Lullaby Songs in the Rural Divine Worship of the People of Sri Lanka's Eastern Province - Tradition and Change

**Priyadarshny Jetheeswaran**
*Senior Lecturer, Department of Music*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0007-2694-9942*

**Abstract**

*Eastern Sri Lanka, known as a vast cultural territory stretching along the eastern coast of the island of Sri Lanka, has a long political and social history unique to this region. While the aboriginal inhabitants of this region were the Veddas, Veddah Vellalars, and Austroloid ancient tribes, over time people who came and settled from Tamil Nadu, Kalinga, and Kerala, or those who established their rule here, along with the indigenous peoples, through the intermingling that occurred between them over time, have resulted in the arts, divine worship practices, and ways of life they brought with them continuing to be observed as the lifestyle of the people of this region to this day. However, it is noteworthy that remnants of the aboriginal peoples are also found here and there. Two types of worship practices are observed here: those based on Agama (scriptural traditions) and those not based on Agama. Comparatively, non-Agamic village deities wield more influence in this region than the Agamic major deities. The method of worshipping or performing puja to these village deities is called performing rituals. When performing these rituals, they sing appropriate songs, invoke the deities, and perform with dance and song. These songs are the ritual songs. Here, numerous musical forms such as Kaviyam (epic poetry), Ammanai, Oonchal (swing songs), Thalatu (lullabies), Kulurti, Ula (procession songs), Prarthana (prayers), Sindhu, Akaval, and Pallu are found. Among these, Thalatu songs are composed as songs that soothe or pacify God or the Goddess.*

***Keywords:*** *Eastern Sri Lanka, Sri Lanka's Eastern Province, Eastern Coast, Cultural Territory*

**References**

1. Subburetti, N., Saiva Religious Commentary, Venkatam Publications, 1984.
2. Inbamogan, V., Rituals of Eastern Sri Lanka, Kumaran Book House, Colombo, 2012, First Edition.
3. Ganapathipillai, C., Mahamaridevi Divyakarani, 1971.
4. Arulambalam, M., Iraiyinba Paavaram, A.R. Printers, Trincomalee, 2016, First Edition.
5. Hindu Light, All Ceylon Hindu Congress Golden Jubilee Special Issue, All Ceylon Hindu Congress.
6. Inbamogan, V., Rituals of Eastern Sri Lanka, Kumaran Book House, Colombo, 2012, First Edition.
7. Sundaram, V.P.Ka., Treasury of Tamil Musical Arts (Volume I), Bharathidasan University, Tiruchirappalli, 2006, Second Edition.
8. Suganath Subramaniam, Village Worship Rituals and Related Songs of Batticaloa District, Kumaran Publications, 2006.

9. Thillainathan, Sa., Hindu Religious Culture in Batticaloa, Manimekalai Publications, Chennai, 2006.
10. Thillainathan, Sa., Cultural Traditions of Batticaloa Tamils, Kumaran Book House, Colombo, 2015.
11. Thillainathan, Sa., Temples of Batticaloa and Tamil Culture, Writers' Promotion Center, Kumaran Press, Second Edition, 2010.
12. Nadaraja, F.X.C., People's Resources and Life in Batticaloa, Batticaloa Hindu Youth Front, 1980.

# இலங்கையின் கிழக்கு பிரதேசத்து மக்களின் கிராமியத் தெய்வவழிபாட்டில் தாலாட்டுப் பாடல்கள் – மரபும் மாற்றமும்

*முனைவர் பிரியதஷினி ஜெதீஸ்வரன்*
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## முன்னுரை

இலங்கைத் தீவின் கிழக்குக் கரையோரமாக நீண்டுகிடக்கும் பண்பாட்டுப் பெருநிலம் கிழக்கிலங்கை என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசத்திற்கென நீண்டதொரு அரசியல், சமுக வரலாறு உண்டு. இப்பிரதேசத்தின் பூர்வ குடிகள் வேடர், வேடவெள்ளாளர், ஒஸ்ரலோயிட் பழங்குடிகளாயிருந்தபோதும் காலத்திற்குக் காலம் தமிழ்நாட்டிலிருந்தும் கலிங்கத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் இங்குவந்து குடியேறிய அல்லது தம் ஆட்சியை நிறுவிய மக்கள் சமுகமும் சுதேசிகளும் காலப்போக்கில் தம்மிடையே ஏற்படுத்திக்கொண்ட கலப்பினால் அவர்கள் தம்மோடு கொண்டு வந்த கலைகளும் தெய்வ வழிபாடுகளும் வாழ்க்கை முறைகளும் இன்றுவரை இப்பிரதேசத்து மக்களின் வாழ்வியலாகவே காணப்படுகின்றன. எனினும் பூர்வகுடிகளின் எச்சசொச்சங்களும் ஆங்காங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு ஆகமம் சார்ந்தது, ஆகமம் சாராதது என இரு வகையான வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஒப்பிட்டளவில் ஆகமம் சார்ந்த பெரும் தெய்வங்களைவிட ஆகமம் சாராத கிராமிய தெய்வங்கள் இப்பிரதேசத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கிராமியத் தெய்வங்களை வழிபடும் அல்லது பூசை செய்யும் முறையினைச் சடங்கு செய்தல் என்பர். இச்சடங்குகளை செய்யும்போது அதற்குரிய பாடல்களைப் பாடி தெய்வங்களை உருவேற்றி ஆடிப்பாடி நிகழ்த்துவர். இப்பாடல்களே சடங்குப் பாடல்களாகும். இங்குக் காவியம், அம்மானை, ஊஞ்சல், தாலாட்டு, குளுர்த்தி, உலா, பிரார்த்தனை, சிந்து, அகவல், பள்ளு போன்ற ஏராளமான இசை வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் தாலாட்டுப் பாடல்கள் இறைவனை அல்லது இறைவியை ஆற்றுப்படுத்தும் பாடல்களாக அமைந்தவை.

தாலாட்டுப் பாடல்கள் பற்றியும் குறித்த பிரதேசத்தில் அவற்றின் பயில்நிலை பற்றியும் அவற்றின் இசை பற்றியும் ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வாளர் கர்நாடக இசைக்கலைஞராக இருப்பதால் இப்பாடல்கள் கர்நாடக இசையின் தளத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தை ஆய்வு எல்லையாகக்கொண்டும், இப்பாடல்கள் காலப்போக்கில் அழிந்து விடாமல் அச்சமுகத்தின் தனித்துவங்கள் பேணப்படவேண்டும் என்ற நோக்குடனும் ஆய்வு செய்யப்படுகிறது. இது இலக்கிய ஆய்வாகவும் கள ஆய்வாகவும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளிலிருந்து விபரண ஆய்வாகவும் அமைவதுடன் கிழக்கிலங்கையில் சடங்கு வழிபாட்டில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் இசையாலும் பொருளாலும் தனித்துவமானவை எனும் கருதுகோளை முன்வைத்து ஆய்வுசெய்யப்படுகிறது.

**கிழக்கிலங்கை சடங்குத் தெய்வங்களும் வழிபாடும்**

இப்பிரதேசத்தில் மாரியம்மன், காளியம்மன், கண்ணகையம்மன், பேய்ச்சியம்மன், கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன், வீரமாகாளி போன்ற ஏராளமான பெண் தெய்வங்களும் வைரவர், ஐயனார், பெரியதம்பிரான், வதனமார், காத்தான், நாகதம்பிரான் வீரபத்திரர் போன்ற ஆண்தெய்வங்களும் சடங்கு செய்து வழிபாடாற்றப்படுகின்றன. மேலும் குமாரத்தன், மாறா, வீரவள் செம்பகநாச்சி, மாநீலி, குடாநீலி, தெய்யநாச்சி மறுமுந்தநாச்சி, பொல்லுக்காரன். உத்தியாக்கள் எனப் பல தெய்வங்கள் வேட மக்களால் வழிபடப்படுகின்றன.

இலங்கையின் கிழக்கு பிரதேசத்தில் சடங்கிசை, கூத்திசை என இரு பெரும் மண் சார்ந்த இசைமுறைகள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுவர். தெய்வ நம்பிக்கை களோடு கூடவே சடங்குகளை ஆற்றுகின்ற போது இசைக்குரிய அம்சங்களைக் கொண்டு பாடல்களைப் பாடுகின்ற மரபை இங்குக் காண்கிறோம். இச்சடங்குகளில் பாடப்படும் பாடல்களோடு இணைந்து அவற்றிற்குரிய உடுக்கை, சிலம்பு, பறை போன்ற இசைக் கருவிகளும் இசைக்கப்படுவதைக் காணலாம். இங்குப் பொதுவாக வளம் பெருகவும் நோய்நொடியிலிருந்து மக்களைக் காக்கவும் இத் தெய்வங்களுக்குச் சடங்குகள் இயற்றப்படுகின்றன. இவை அனைத்தும் இணைந்ததே சடங்கிசை அல்லது கரண இசை ஆகும். கிழக்கிலங்கை வாழ் மக்கள் மத்தியில் அவர்களது வாழ்வோடு இரண்டறக் கலந்த ஆகமம் சாராத வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன. இச்சடங்குகளின் ஆற்றுகைக் களமாக இவ்வழிபாட்டுக் கோயில்களும் பந்தல்களும் அதனோடு ஒட்டிய வேறு சில தனியிடங்களும் காணப்படுகின்றன. இங்கு மந்திரங்கள் சொல்லி உடுக்கடித்து பாடல்களைப் பாடி பயபக்தியுடன் இக்கரணங்கள் ஆற்றுகை செய்யப்படுவதனால் இசையின் தாற்பரியத்தின் மேன் நிலை பயன்பாடு இச்சடங்கு வழிபாடுகளில் காணப்படுகின்றது.

**பக்தி இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்கள்**

தெய்வங்களைத் தாயாகக்கொண்டு வழிபடும் பாங்கு இந்து சமயத்தின் மிக தொன்மைவழிபாடாகும். "அம்மா" "தாயே" என்று இறைவியையும் "அப்பனே" "ஐயனே" என்று இறைவனையும் விளித்துக் கூறி தன்னை அவர்களின் "குழந்தை" எனச் சுட்டிப் போற்றும் தன்மையை நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்களில் காணலாம். இந்து சமயம் கூறும் இறைவனை வழிபடும் நான்கு மார்க்கங்களில் சற்புத்திர மார்க்கம் இதனையே சுட்டுகிறது.

திருமூலர்

"பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட்டன்னமும் நீர்சுத்தி செய்தலும்
மாசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே"

என்கிறார்.

இதனை "மகன்மைநெறி" என்றும் கூறுவர். மகன்மை நெறிக்குச் ஞானசம்பந்தப் பெருமானை எடுத்துக்காட்டாகக் கூறலாம். (சைவசமய விளக்கு பக்-344) (சுப்புரெட்டியார். ந, வெங்கடம் பப்ளிகேசன் 1984) மாணிக்கவாசகர் இறைவனை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று விளிக்கிறார். அதன் தொடர்ச்சியினை இப்பிரதேசத்திலுள்ள கிராமியத்தெய்வ வழிபாடுகளில் பாடப்படும் சடங்குப் பாடல்களில் காணலாம். குறிப்பாக இப் பிரதேசங்களில் சடங்குப் பாடல்களில் காணப்படும் தாலாட்டுப் பாடல்கள் மகன்மை நெறிசுட்டும் பாடல்களாகக் காணப்படுகின்றன. பக்தன் தன்னைக் குழந்தையாகப் பாவனை செய்து இறைவனை அல்லது இறைவியைப்

போற்றிப்பாடும்பாங்கினைத்தாலாட்டுதல் எனப் பயில்கின்றனர். பொதுவாக நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்கள் மக்களின் பழக்க வழக்கங்கள், தாய்மையின் சிறப்பு, நம்பிக்கைகள், வீரச்செயல்கள் குடும்பத்தின் சிறப்பு தந்தையின் குணம், மாமன் மாமியின் சிறப்பு, குழந்தையின் வாழ்க்கை பற்றிய எதிர்வுகூறல்கள், ஒரு தாயின் குழந்தை பற்றிய கனவுகள், கற்பனைகள், போன்ற கருத்துக்கள் பொதிந்ததாகக் காணப்படும். மேலும் தாலேலோ, ராராரோ, ஓராரோ ஓ... ஆயி போன்ற பொருளற்ற ஓசை நயம் பொருந்திய சொற்களும் இடம்பெறும். இவை நீண்ட நெடிய ஓசையுடன் குழந்தையின் மனதை ஒரு நிலைப்படுத்தி, சாந்தப்படுத்த தக்கவாறு அமைதிருக்கும்.

வாய்மொழி இலக்கியங்களுக்கு இலக்கிய தரம் பெற்றுத் தந்ததில் திருமுறைகளும் பாசுரங்களும் போற்றத்தக்கவை. இதற்கு அம்மானை, ஊசல் தாலாட்டு போனறவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். அந்த வகையில் பெரியாழ்வார் "தாலாட்டு" வடிவத்திற்கு வரிவடிவம் கொடுத்தார் என கூறினால் மிகையில்லை.

"ஊமன் தாராட்ட உறங்கிற்கே" என்று முத்தொள்ளாயிரத்தில் தாலாட்ட என்பதற்கு தாராட்ட எனக் கையாளப்படுகின்றது. கம்பராமாயணத்தில் "பச்சைத் தேரை" தாலாட்டும் பண்ணை" என்று கம்பர் தாலாட்டு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். தாலாட்டுப் பாடல் ஓசையின் இனிமையை திருஞான சம்பந்தர். "பண்ணமரும் மென் மொழி பாலகரைத் தாலாட்டும் ஓசை கேட்டு.." எனவும் பெரியாழ்வார். "மாணிக்கம் கட்டிவயிரம் இடைகட்டி ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச்சிறு தொட்டில் பேணி உனக்கு" எனப் பாடி "வையம் அளந்தானே தாலேலோ" எனத் தாலாட்டுப் பாடும் பாசுரங்களில் தாலாட்டின் இலக்கிய பாங்கினையும் குறிப்புக்களையும் காணலாம். (பெரியாழ்வார் திருமொழி-1.3.பாசுரம்-1)

"தால்" என்றால் நாக்கு. "ஆட்டு" என்றால் ஆட்டுதல் என்ற நாக்கினை ஆட்டி ஒலி எழுப்பி குழந்தையை உறங்கச் செய்தலின் காரணப் பெயரே "தாலாட்டு" எனும் பதமாக இருக்கலாம். தாலாட்டை ராராட்டு, ஓராட்டு தாராட்டு, ஏலாட்டு, ரோராட்டு எனப் பலவாறாக இப்பிரதேசத்தில் அழைப்பர்.

## சடங்கும் தாலாட்டுப் பாடல்களும்

சடங்குகள் சிறுதெய்வங்களுக்காக ஆற்றப்படுபவை. அதாவது கிராமியத் தெய்வங்களுக்காக மக்கள் கூடி வருடா வருடம் குறித்த காலத்தில் வருடத்திற்கு ஒருமுறை கோயிற் கதவு திறந்து நிகழ்த்தப்படுபவை. இவை அவ்வூர் மக்களின் சமுகப் பொருளாதார வசதிக்கேற்ப மூன்று நாட்கள் அல்லது ஐந்து, ஏழு நாட்கள் சடங்குகளைச் செய்வர். சடங்கு முடிந்து கோயிற்கதவு மூடப்பட்டால் மறுவருடமே அக்கதவு திறந்து சடங்காற்றப்படும். இதுவே விதிமுறை. இச்சடங்குகளே அத்தெய்வங்களை வணங்குகின்ற முறையாகும். அவ்வாறு வணங்குகின்றபோது மந்திரம் சொல்லி உடுக்கடித்து தேவாதிகளை உருவேற்றி தாலாட்டு, மன்றாட்டு போன்ற பாடல்களைப் பாடி வணங்குவது இதன் தனித்துவமாகும்.

தாய்த் தெய்வ வழிப்பாட்டில் சிறந்த இலங்கையின் கிழக்குப் பிரதேசம் ஓர் தாய்வழி சமுகமாகும்.

**"குழந்தை படும் தூயரம் சிவமுத்துமாரி"**
**"பாலன் படும் துயரம் சிவமுத்துமாரி"**

என இப்பாடல்களில் மிகுந்து வருவது குறிப்பிடத்தக்கது. கோயில் சடங்குகளில் மட்டுமல்ல அம்மை, கூகை, சின்னமுத்து போன்ற நோய்களால் அவதிப்படும் நோயாளியை வயதான பெண்மணிகள் வேப்பம் பத்திரத்தை( இலை) பரப்பி அதிலே கிடத்தி வேப்பிலையால் உடலெல்லாம் தடவி தாலாட்டுப்பாடும்

வழக்கம் இன்றும் இப்பிரதேசத்தில் காணப்படுகிறது. இத்தருணங்களில் மாரியம்மன் தாலாட்டு பாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஓர் பாசப்பிணைப்புடன் தெய்வத்தை குழந்தையாக வரித்து பாடும் பண்பினை கிழக்கிலங்கைச் சடங்குகளில் காணலாம். இது ஓர் முக்கியமான பண்பாகும். இங்கு சடங்குவழிப்பாட்டில் பெரும்பாலும் பெண் தெய்வங்களுக்கே தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்ட போதும் வீரபத்திரர் தாலாட்டு, காத்தவராயன் தாலாட்டு, இருளன் மருளன் தாலாட்டு பெரியசாமி தாலாட்டு, என ஆண் தெய்வங்களுக்கான தாலாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. எனினும் மாரியம்மன் வழிப்பாட்டில் தாலாட்டு பிரதான இடம் வகிக்கின்றது. இங்கு பூங்காவனத் தாயார் தாலாட்டு, சிவமுத்து மாரியம்மன் தாலாட்டு என்பன மாரியம்மனுக்குரிய தாலாட்டுகளாகும். பூங்காவனத் தாயாரின் தாலாட்டு ஈரடிகள் கொண்ட 61 பாடல்களைக் கொண்டது. பேய்ச்சியம்மன் தாலாட்டு ஈரடிகள் கொண்ட 74 பாடல்களைக் கொண்டது. திரெளபதை அம்மன் தாலாட்டு ஈரடிகளைக் கொண்ட 53 பாடல்களைக் கொண்டது. காளியம்மன் தாலாட்டு ஈரடிகளைக் கொண்ட 54 பாடல்களை கொண்டது. மேற்கூறப்பட்ட தாலாட்டுப் பாடல்கள் ஏடுகளிலிருந்து தொகுக்கப்பட்ட "மகாமாரித்தேவி திவ்விய கரணி" எனும் சடங்குப்பட பாடல்களின் தொகுப்பு நூலில் காணப்படுகின்றன. மேலும் பல தாலாட்டுப்பாடல்கள் சில சடங்கு கோயில்களில் குறித்த தெய்வத்திற்கு என இயற்றப்பட்டு அக்கோயில்களில் பாடப்பட்டு வருகின்றன.

தாலாட்டுப் பாடல்களின் அமைப்பு பெருபாலும் ஈரடிகளாகவே அமைந்துள்ளன. ஒவ்வொரு அடியின் இறுதியிலும் அத்தெய்வத்தின் பெயர் ஒலிக்கின்றது.

- "பட்டுப்பளபளெனப் பத்திரகாளி, பறந்தோடி வாறாவாம் பத்திரகாளி" (ம.தி.க-ப:159)
- "எங்கே பாராமுகமோ பள்ளயப்பேச்சி, எவ்விடத்தே சிந்தனையோ பள்ளயப்பேச்சி" (ம.தி.க-ப:159)
- தீராத நோய்பிணிகள் சிவமுத்துமாரி தாயார், தீர்த்துவிட வேணும்மா சிவமுத்துமாரி" (ம.தி.க-ப:35)

கிழக்குப் பிரதேசத்தில் பாடப்படுகின்ற தாலாட்டு பாடல்களின் இசைப் பற்றி நோக்கும்போது அவை பல மெட்டுக்களில் பாடப்படுவது அவதானிக்கப்பட்டது. களுதாவளை எனும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் காளிகோயில் சடங்குப் பூசாரியும் சடங்கு பாடல்கள் பாடுகிற வருமாகிய நிலுசுன் பத்மனாதனின் கருத்துப்படி தாலாட்டுப் பாடல்களின் இசையில் நெகிழ்வுத்தன்மை உள்ளதாகவும் அவை கோயிலுக்கு கோயில் தமக்கு ஏற்ப மெட்டுக்களை உருவாக்கி பாடி வருவதாகவும் கூறினார். அந்தவகையில் ஒன்பது வகையான மெட்டுக்கள் ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக இருந்தன. இப்பாடல்கள் அனைத்தும் உடுக்கடியுடன் பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. தாலாட்டு பாடல்களைப் பாடும்போது உள்ளத்தை ஆற்றுப்படுத்தும் பண்பினைக் காணக்கூடியதாக உள்ளது.

**வீரபத்திரர் தாலாட்டு**

**அரி ஓம் நமசிவாய ஆதி வீரபத்திரனே**
**ஆனந்த நமசிவாய**
**குருவே நமசிவாய ஆதி வீரபக்திரனே**
**குருலிங்க நமசிவாய**
**மயிலிற்கால் வழியொதுக்கும் ஆதிவீரபத் திரனே**
**வாலகுரு சன்னாசி**
**வாறாராம் வாறாராம் ஆதிவீரபத்திரனே**
**(ம.தி.க-ப :215-217)**

இவ்வாறு 33 பாடல்கள் உள்ளன. அத்துடன் விஷ்ணு தாலாட்டு, சிவ

பெருமான் தாலாட்டு போன்றவையும் காணப்படுகின்றன. மேலும் 14 வைரவர் மூர்த்தங்களுக்கும் தாலாட்டு பாடல்கள் காணப்படுகின்றன. இவை பாடல்களின் எண்ணிக்கைகளின் படி ஆதி பைரவர் - 11, சண்டவைரவர் - 6, சங்கார பைரவர் - 4, கபால பைரவர் - 9, கோதண்ட பைரவர் - 7, நரசிங்க பைரவர் - 4, ஊமத்த பைரவர் - 5, வினாசக வைரவர் - 5, சுத்தாங்க பைரவர் - 4, நீலவைரவர் - 4, ஆதிவீரபத்ர பைரவர் - 5, அகோரவீரபத்ர பைரவர் - 4, சுடலை பைரவர் - 8, உச்சி பைரவர் - 3, கால பைரவர் - 3, சந்தி பைரவர் - 4, மாலை பைரவர் - 23, என மொத்தம் 109 பாடல்கள் மகாமாரிததேவி திவ்ய கரணி எனும் தொகுப்பு நூலில் உள்ளன. மேலும் சுடலப்பா மீது பாடப்பட்ட பெரியசாமி தாலாட்டு, விஷ்ணு தாலாட்டு எனப் பல தாலாட்டுப் பாடல்கள் இப் பிரதேசத்து சடங்குகளில் பாடப்படுகின்றன. (ம.தி.க)

**"ஈரக்குல நடுங்க சுடலப்பா சாமி - ஐயா**
**எழுந்தோடி வாவனய்யா சுடலப்பா சாமி**
**ஆரம் நடுநடுங்க சுடலப்பா சாமி**
**ஆதியிலே வாவனய்யா சுடலப்பா சாமி"**

இப்பாடலில் வரும் பெரும்பாலான சொற்கோர்வைகள் பேய்ச்சியம்மன் தாலாட்டினை ஒத்ததாகக் காணப்படுகின்றது. எனவே அதனை அடியொற்றி பிற்காலத்தில் எழுதப்பட்டதாகவே தெரிகின்றது. தாலாட்டு பாடல்களின் இசையமைப்பு பற்றி இனி நோக்கப்படுகிறது. இசை மரபில் நீலாம்பரி இராகத்தில் தான் தாலாட்டுப் பாடல்கள் பாடுவது என்ற நியதி உண்டு ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் வெவ்வேறு மெட்டுக்களில் இத்தாலாட்டுப் பாடல்களைப் பாடுவது அவதானிக்கப்பட்டது. இங்கு பாடப்படும் ஒன்பது வகையான இசையினை ஒவ்வொன்றாக நோக்கலாம்.

**சிவ முத்து மாரியம்மன் தாலாட்டு**

இது மத்யம ஸ்ருதியில் பாடப்படும். எடுத்துக்கொள்ளும் ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம் என்பனவாகும். இங்கு பஞ்சமத்தில் ஆரம்பித்துப் பாடினால் ஸட்ஜ பஞ்சமத்துடன், சுத்ததைவதம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸவ்ரஸ்தானங்கள் வருகின்றன. மும்மை நடையில் (திஸ்ர) அமைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| ஸ ப ப | ப ப ம | க ா ரி | க ம ா |
| த ந் த | னதோம் | தா.ன | மம்மா |
| கரிஸ | ஸாஸ | ஸாஸ | காக |
| சிவமுத் | துமா. | ரி.அம் | மா.ளே |
| ஸபப | பபம | காரி | கமா |
| தா.னி | னத்தோம் | தா.ன | மம்மா. |
| கரிஸ | ஸாஸ | ஸா, | , , |
| சிவமுத் | துமா | ரி.. | |

இதே போல்.

**வாறாவாம் வாறாவாம் சிவமுத்து மாரி தாயார்**
**மகக்ளுக்கு வரம் கொடுகக்ச் சிவ முத்துமாரி - அம்மாளே**
**தாயல்லவோ நீயெனக்குசிவமுத்து மாரி - தாயார்**
**தலைமகன்டி நானுனக்கு சிவமுத்துமாரி.**
**(ம.தி.க-ப: 33)**

**காளியம்மன் தாலாட்டு**

இத்தாலாட்டுப் பாடல் ஸட்ஜம், சதுஸ்ருதி ரிசுபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம் போன்ற ஸ்வரஸ்தானங்களை எடுத்துக் கொள்கிறது. பெரும்பாலும் மத்தியஸ்தாயி ஸட்ஜத்தையே ஆதாரமாகக்கொண்டு பாடப்படுவதால் சுத்த மத்யமம் பஞ்சமம் சதுஸருஷதி தைவதம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொண்டு மும்மை நடையில் (திஸ்ர) அனாத எடுப்பில் அமைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| ; ம ம த த | த ா நி த பா | ப பா ப பத | மா . ம மா ‖ |
| . . தந்தானத்தோம் | தா.ன மம்மா | தபா ரேகா. | ளி. . அம்மா |
| ; ம ம த த | தா நி த பா | ம மா ப தப | பா ; ; ‖ |
| . . தானினத்தோம் | தா.ன மம்மா | தாயா ரே கா | ளி. . . . |

*இவ்வாறே*

பூசைநல்ல பூசையல்லோ தாயரே காளி – அம்மா
பொனன்ன ஆலயத்தில் தாயாரே காளி – அம்மா
பட்டு பளபளக்க தாயாரே காளி – அம்மா
பத்தினியே வாவனம்மா தாயாரே காளி – அம்மா
(நேர்காணல் - நிலுஷன் பத்மநாதன்)

### காளியம்மன் தாலாட்டு

*அழகிய சந்த அமைப்பில் அமைந்த இத்தாலாட்டும் ஸட்ஜம் சதுஸ்ருதி ரிசுபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், போன்ற ஸவ்ரஸ்தாங்களை எடுத்துக் கொள்கிறது. பெரும்பாலும் மத்யம ஸ்ருதியில் பாடப்படுகிறது. மத்தியஸ்தாயி ஸட்ஜத்தை ஆதாரமாககொண்டு பாடும்போது சுத்தமத்யமம் பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் ஆகிய ஸவ்ரஸ் தானங்களை எடுத்துக்கொண்டு மும்மை நடையில் அமைந்து காணப்படும். பாடலின் ஆரம்பத்தில் சம எடுப்பில் ஆரம்பித்தாலும் இடையில் அனாத எடுப்பிலேயே ஒவ்வொரு பாடலும் ஆரம்பிக்கப்படுகின்றன.*

ரி கா ரீ , | ஸ ா , ஸ ஸ ா |,, ஸ ஸ ா க | கா ரி ஸா ஸ
தா. னா . னம்.. அ ம் மா . . தா னம் அம் மா தாயா ரே
,, ஸ ஸா க | கா ரி ஸா ஸ | ஸா , ஸ ஸ ரி | M ,M M
தானம் அம் மா தா யா ரே தா. ன ம ம் மா. அம்மா
M ,ஸ ரி க | ரீ கரி நீ | ,m ஸ ரி க | ரீ க ரி M
. ஆ, திசக்தி நா ய கி யே . அம் பி கை யே காளியம்மா
ஸா, ரீ ஸ |ஸா , ஸ ரீ | , m ஸ ரி க | ரீ க ரி M
வா..ரு ம ம் மா .. அம் .. மூ த்தவ ளே தாயவளே
M M S a | ஸா, ஸ ரீ /
கே.ளு ம ம் மா..அம் மா
,,m ஸ ரி க | ரீ க ரி நீ | ஸா , ஸ ஸ ரி | M , m M |
..தாலா ட்ட ஓரா ட் ட கா . . ளிய ம் மா.. அம்மா
,, m ஸ ரிக | ரீ க ரி நீ | நி நீ ரிஸா | ஸா , ஸ ரீ |
காரிகையே வந்தருளும் கா . ளியம் மா. . அம்மா

**2. *பூசை நல்ல பூசையல்லோ தாயாரே காளி - அம்மா***
***பொன்னான ஆலயத்தில் தாயாரே காளி - அம்மா***

**3. *உடு கெடுத்து நானழைக்க தாயாரே காளி - அம்மா***
***உத்தமியே கேட்கலையோ தாயாரே காளி - அம்மா***

### வீரமாகாளி தாலாட்டு

*இத்தாலாட்டுப் பாடல் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், கைசிகிநிஷாதம் ஆகிய மூன்று ஸ்வரங்களை மட்டுமே எடுத்துக் கொள்கிறது. வேத மந்திரங்கள் ஓதுகையின் போது ஸ்வரித, உதார்த்த, அனுதார்த்த, ஆகிய ஸ,ரி, நி, எனும் ஸ்வரங்களே ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. இத்தாலாட்டுப் பாடல் சதுஸ்ர நடையில் அமைந்துள்ளது.*

ak ak M ; akakak;|
அம்மா ளே. தா யா ரே.
M ak S ak Sak aks akakakS M ;M M
வா . றாவாம் வாறா வாம் வீ ரமாகா ளி. அம்மா
M ak S ak S ak aks M M S a ak,,,,
விண் ண திர மண்ண தி ர வீர. மாகா ளி.........

Aak ak M ; akakak;|
அம் மா ளே.. தா யா ரே.

***வாளொருகை சூலமம்மா தாயாரே காளி - அம்மா***
***வலது கையில் சக்கரமாம தாயாரே காளி.***
***(நேர்காணல்- நிலுசுன் பத்மநாதன்)***

### சிவமுத்துமாரியம்மன் தாலாட்டு

இத்தாலாட்டு நாவலடி கடல் நாச்சியம்மன் கோயிலில் பாடப்பட்டு வரும் இசை முறையாகும். இங்கு இரு வகையான மெட்டுக்களில் தாலாட்டுப் பாடல் பாடப்படுகின்றதைக் காணலாம்.

இத்தாலாட்டுப் பாடல் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம். சாதாரண காந்தாரம் (மூ), அந்தர காந்தாரம் சுத்தமத்யமம், பஞ்சமம், சுத்த தைவம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொள்கிறது. மேலும் மும்மை (திஸ்ர) நடையில் அமைந்துள்ளதை காணலாம். இங்கு ஸ்வரஸ்தானங்களை வேறு பிரித்துக் காட்டவதற்காக மட்டும் நட்சத்திரக் குறி பயன்படுத்தப்பட்டுள்ளது.

ak S fk / dksaak / ssdssa / ak, aak //
வா ற ப வ.னியென்ன சிவமுத்துமா ரி... அம்மா.
ak ss fk / dk ss ak / ss ds sa / ak, aak //
வந்தெழுப்பும் நேரமென்ன சிவமுத்துமா ரி.. அம்மா
ak S fk / dk sa ak / ss ds sa / ak, aak //
மண் டா. டி நானழை க்க சிவ முத்து மா ரி. .எந்தன்
ak S fk / dk sa ak / ss ds sa / ak g gkg //
மா தா வே வாருமம் மா சிவமுத்துமா ரி.அம்மாளே
gk g hk g / fk ss fk / d*s ss S / S , a ak //
பூச நல்ல பூசையம்மா சிவமுத்துமா ரீ. . உந்தன்
as ds fk / Ss s fk / ds a ak a / ak ; ; //]
பொன்னான ஆலயத்தில் சிவ முத்துமா ரி. . . . .
(நேர்காணல்-சி.பொன்னம்மா)

## முத்து மாரியம்மன் தாலாட்டு

முத்துமாரியம்மன் தாலாட்டு இங்கு வேறு இசையில் அமைந்துள்ளது. இங்கு ஸட்ஜம், சதுஸ்ருதிரிபம் அந்தர காந்தாரம், காகலி நிஷாதம் என்னும் ஸ்வ்ரஸ்தானங்கள் வருகின்றதுடன் மும்மை (திஸ்ர) நடையில் அமைந்துள்ளதும் சம எடுப்பில் ஆரம்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ab aaak / akaaak / a SaM / makS; / aS aM / m ak S ,/
ச . ச னிட பா.கத் துறை எந்தனம்மை வாறாவாம் எந்தனம்மை வாறாவாம்
ak s d S / dk s s ak] / a ak S a / a ak ak ,/

**வா. றூ வாம் வா.றாவாம் முத்த மாரி வாறாவாம் .**
**மோனத்தி யானம்செய்து எங்களம்மை வாறாவாம் எங்களம்மை வாறாவாம்**
**வாறாவாம் வாறாவாம் முத்துமாரி வாறாவாம்**
**வாறாவாம் வாறாவாம் முத்துமாரி வாறாவாம்.**
**(நேர்காணல் -அ.தி.விநோத்)**

## விஷ்ணு தாலாட்டு

இங்கு இத்தாலாட்டுப் பாடலில் ஸட்ஜம், சுத்தரிஷ்பம் அந்தர காந்தாரம் சுத்தமத்யம், பஞ்சமம் ஆகிய ஸ்வ்ரஸ்தானங்கள் வருகின்றன. இவற்றை மாயாமாளவகௌளை இராகத்தின் பூர்வாங்க ஸ்வரங்களாகக் கொள்ளலாம். மும்மை (திஸ்ர) நடையில் அமைந்துள்ளன.

ak s fk f / fk f fk f / dk g f k g / d f d S , /
மூ ல மூல ரா ய னாய மூ ல மூல ரா . யனாம்
gkg fk f / d f d S, / d f d S a / ak a ak, /
மூல மூல ரா .ய னாய மூல மூ.ல ரா ய னாம்

பூத லத்தை ஓர டிய ளந்த ரூப மால னே
ஆல தாம ரைக்க ரன்ப ணிந்து முன்னே ஏகு வேன்.
(நேர்காணல்- நிலுஷன் பத்மநாதன்)

இந்த இசையமைப்பில் தொடர்ந்து இத்தாலாட்டு பாடப்படும்.

## கண்ணகையம்மன் தாலாட்டு

இத்தாலாட்டுப் பாடல் அண்மைக்காலத்தில் ஆரையம்பதி கண்ணகை அம்மன் பேரில் ஆரையூர் அருளம்பலம் அவர்களால் இயற்றிப் பாடப்பட்டு வருகின்றது.

இப்பாடலின் இசையில் ஸட்ஜம், சுத்த ரிஷபம், சதுஸ்ருதி ரிஷபம்(ஷு) சாதாரண காந்தாரம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்கள் வருகின்றதுடன், மும்மை (திஸ்ர) நடையிலும் அமைந்துள்ளது. இங்கு ஸ்வரஸ்தானங்களை வேறுபடுத்தி அறிவதற்காக மட்டுமே நட்சத்திரக் குறி பயன்படுத்தப்பட்டுள்ளது

ak s a S / ak s a S / ak s a s a / M ; ; /
வா ருமம்மா வாரு மம்மா கன்னை கைதா யே.....
M d s ak / S d s ak / M m d S / ak ; ; /
வரம்கொடுக்க வேணுமம்மா கன்னைகைத்தா யே....

**அடியார்படும் துயரம் கண்ணகைத் தாயே**
**ஆலயத்தில் கேட்கல்லையோ கண்ணகைத் தாயே**
**அதர்மம் தலை தூக்குதம்மா கண்ணகைத் தாயே**
**தர்மம் காக்க மனமில்லையோ கண்ணகைத் தாயே.**
**(நேர்காணல் -மூ.அருளம்பலம்)**

## காத்தவராயன் தாலாட்டு

காத்தவராயன் தாலாட்டு ஏனைய தாலாட்டுக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. இதன் இசை அதன் பாடல் அமைப்பு என்பன மந்திரம் ஓதும் முறையில் "நமசிவாய" என ஒவ்வொரு அடியும் முடிக்கப்படுகிறது. இது பாடலாக மந்திரம் போல் அமைந்துள்ளது. சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வ்ரஸ்தானங்கள் வருகின்றன.

m M hgf gkhk gf fkg fkg hg fk gk hk
அரிழும் நமசி வா ய நம ஆதி காதத் முனி ஆ னந் த
மமப தாப பபா
நமசி வாய நம (மதி.க- பக் :185)

இவ்வாறு 48 பாடல்கள் சுலோகங்களாக காணப்படுகின்றன.

## முடிவுரை

இப்பிரதேசத்தில் காணப்படும் சடங்குப் பாடல்கள் கோயில்களின் சடங்கு நாட்களில் பூசை முகத்தில் தவிர ஏனைய இடங்களில் எவ்வேளைகளிலும் பாடப்படுவதில்லை. ஆனால் மாரியம்மனுக்கும் வைரவருக்கும் வீடுகளில் இடம்பெறும் சக்கரை அமுது, வைரவர் சடங்கு என்பவற்றில் காவியங்கள் பாடப்படுவதைக் காணலாம். இவை இம்மக்கள் குழுவினது தனித்துவமான அடையாளங்களாகும். இவ்அடையாளங்களே அம்மக்களின் இருப்பைத் தீர்மானிக்கவும் தலைமுறை கடந்தும் விழுமியங்களை பாதுகாக்கவும் அதனால் உண்டாகும் சமுகப் பயன்களைத் துய்ப்பதற்கும் ஏதுவாகிறது. இங்குச் சமகாலத்தில் பாடப்படும் சடங்குத் தாலாட்டுப் பாடல்களை ஆய்வுசெய்து ஸ்வர தாளக்குறிப்புக்களுடன் தரப்பட்டுள்ளது. இங்கு ஒன்பது வகையான மெட்டுக்களில் பாடப்படுகின்றன. தற்போது ஆங்காங்கு பல புதிய பாடல்களும் அதற்கான மெட்டுக்களும் உருவாக்கப்பட்டு இறுவட்டுக்களில் பதிவுசெய்து வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை அச்சமுகத்தின் தனித்தவத்தைப் பேணவும் அவர்களின் பண்பாட்டினைப் பாதுகாக்கவும் ஏதுவாகும் என்பதில் ஐமில்லை

## சுருக்கக் குறிப்பு

ம.தி.க - மகாமாரித்தேவி திவ்வியகரணி

## துணை நூல்கள்

1. சைவசமய விளக்கு, சுப்புரெட்டி. ந, வெங்கடம் பப்ளிகேசன் 1984
2. இன்பமோகன். வ, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2012, முதற்பதிப்பு.
3. கணபதிப்பிள்ளை. சி, மகாமாரித்தேவி திவ்வியகரணி, 1971
4. அருளம்பலம். மு, இறையின்பப் பாவாரம், ஏ.ஆர், பிரண்டர்ஸ், திருகோணமலை, 2016, முதலாம்பதிப்பு
5. இந்து ஒளி, அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர், அகில இலங்கை இந்துமாமன்றம்.
6. இன்பமோகன். வ, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2012, முதற்பதிப்பு.
7. சுந்தரம் வீ.ப.கா., தமிழிசைக் கலைக் களஞ்சியம் (முதலாம் தொகுதி)., பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி ராப்பள்ளி, 2006, இரண்டாம் பதிப்பு.
8. சுகந்தி சுப்ரமணியம், மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், குமரன் பதிப்பகம், 2006.
9. தில்லைநாதன். சா, மட்டக்கப்பில் இந்து சமய கலாசாரம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 2006.
10. தில்லைநாதன்.சா., மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2015.
11. தில்லைநாதன். சா, மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், குமரன் அச்சகம், இரண்டாம் பதிப்பு, 2010.
12. நடராஜா எப்.எக்ஸ்.சீ., மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும், மட்டக்களப்பு இந்து வாலிபர் முன்னணி, 1980.

## நேர்காணப்பட்டோர்

1. அன்றன் தீயோ பிளஸ் வினோத், சித்த வைத்தியர் மற்றும் பூசகர், மட்டக்களப்பு, (வயது-25).
2. அருளம்பலம். மூ, ஓய்வுபெற்ற அதிபர், ஆரையம்பதி, (வயது: 71).

3. கணபதிப்பிள்ளை. மு, ஓய்வுபெற்ற அதிபர் மற்றும் அண்ணாவியார், ஆரையம்பதி, (வயது- 97).
4. கணபதிப்பிள்ளை. இ, (2020), கூத்துக் கலைஞர், கன்னங்குடா.
5. கந்தப்பன். த, வண்ணக்கர், வயது - 70, தோற்றாத்தீவு.
6. சிவமூர்த்தி. கோ, தலைமை புசகர், வயது - 43, பெரியதம்பிரான் ஆலயம், - மட்டக்களப்பு.
7. சுஜேந்.சு, உதவிப்புசகர், வயது - 30, உதவிப்புசகர், பெரியதம்பிரான் ஆலயம், மட்டக்களப்பு.
8. தட்சணாமூர்த்தி. த, பூசகர், கண்ணகி அம்மன் கோயில், வயது - 50, ஆரையஙம்பதி.
9. பொன்னம்மா.க, வயது - 67, குடும்ப பெண், கோயிற்குளம், மட்டக்களப்பு.